தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தேசிய அளவிளான வேளாண் தொழில் நிர்வாகத் திறன் போட்டி"ப்ரபந்தாஸ் '16 நிறைவு விழா**

"ப்ரபந்தாஸ் '16" தேசிய அளவிளான வேளாண் தொழில் நிர்வாகத் திறன் போட்டி, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறையினால் பிப்ரவரி 5-6-2016, அன்று நடைப்பெற்றது. இதன் நிறைவு விழா பிப்ரவரி 6, 2016 அன்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 15 கல்லூரிகளைச் சார்ந்த 250க்கும் மேற்பட்ட மேலாண்மை மாணவர்கள் பங்கேற்றனர்.

வேளாண்மை ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம இயக்குனர் முனைவர் மு. சின்னதுரை அவர்கள் "ப்ரபந்தாஸ்" பற்றி விரிவாக எடுத்துரைத்தார் மற்றும் மேலாண்மை மாணவர்கள் நடத்திய போட்டி என்று கூறி சேவைத்துறையே இப்போது சிறந்து விளங்குகிறது மற்றும் இதுவே அனைத்து துறைகளினின்றும் வெற்றிப் பெற்று வருகிறது. அதோடு உற்பத்தியிலும் சேவைத் துறையே சிறந்தது என்று கூறினார். தோட்டகலையே உணவு உற்பத்தியை விட மேலோங்கி வருகிறது எனவும் உணவு உற்பத்தி செயலாக்கம் தற்போது தோட்டக்கலையைவிட சிறந்தது இல்லை எனக்கூறி மாணவர்களை வாழ்த்தி விடைப்பெற்றார்.

தமிழ்நாடு வேளாண் முன்னால் மாணவராகிய சிங்கப்பூர் ஸ்மார்ட் அக்ரிபிஸ் (Smart Agribiz) வேளாண் தொழில் ஆய்வு மைய நிறுவனர் திரு. S. ராகவன் அவர்கள் தன்னுடைய உரையில் தான் பணியாற்றிய மற்றும் பணிபுரிந்த அனுபவங்களைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துறைத்தார். வேளாண்மை மேம்பாட்டிற்கு அதிக அளவில் ஆற்றல் மிக்க மனித வளத் தேவைகள் அதிகரித்து வருவதாக தெரிவித்தார். மாணவர்கள் கல்வி கற்கும் போது உரிய வேலை கிடைப்பதற்கு தேவையான திறமைகளையும் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ள

வேண்டும் என்று தெரிவித்தார். இந்திய வேளாண் பட்டதாரிகள் பல நாடுகளில் திறமையாக செயல்படுவதையும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண் முன்னால் மாணவராகிய ஹைதராபாத் ஷீரிஷ்டி உயிரியல் இயக்குனர் திரு. P. ஜெயராமன் தன்னுடைய உரையில் வேளாண் பட்டதாரிகள் பணிகளுக்கு செல்வதை விட வேளாண் தொழில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதுபற்றி கூறுகையில் முதல் முறையாக தொழில் தொடங்கியபோது தான் மேற்கொண்ட சிரமங்களைப் பற்றி விளக்கினார். வேளாண்மை வளர்ச்சியில் உள்ள பிரச்சனைகளை வாய்ப்புகளாக மாற்றி புதிய தொழில்கள் தொடங்க அறிவுறுத்தினார்.

முனைவர். சே.தே. சிவக்குமார், பேராசிரியர் மற்றும் துறை தலைவர் (வேளாண் மற்றும் ஊரக மேலாண்மை) அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை அறிவித்தார். முதுநிலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மேலாண்மைப் போட்டிகளில் குஜராத்தை சேர்ந்த ASPEE வேளாண் வனிக மேலாண்மை நிறுவன மாணவர்களும், இளநிலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மேலாண்மைப் போட்டிகளில் தமிழ்நாடு தோட்டக்கலைக் கல்லூரி, பெரியகுளம் வெற்றிவாகை சூடினர். ஒரு லட்சத்தி பதினோராயிரம் ரூபாய் ரொக்கத்தொகை பரிசாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

செல்வி ஜீனா. M இரண்டாம் ஆண்டு முதுநிலை வேளாண் வணிக மேலாண்மை மாணவி நன்றியுரையாற்றனார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்